

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களிடம் 01.03.2024 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு நெடுஞ்சாலை ஒப்பந்தகாரர்களின்கூட்டமைப்புசார்பாகமாநிலதலைவர்திரிசங்குதலைமையில்,கட்டுமானப்பொருட்களின்விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளிக்கப்பட்டது.



வருகின்ற நாடாளுமன்றத் பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட கே.என்.அருண் நேரு சென்னையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் விருப்ப மனுவை அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியிடம் வழங்கினார். அருகில் திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், பழனியாண்டி, ஸ்டாலின் குமார் கதிரவன், குளித்தலை எம்.எல்.ஏ. மாணிக்கம், பெரம்பலூர் எம்.எல்.ஏ. பிரபாகரன், முன்னாள்எம்.எல்.ஏ. ராஜ்குமார் மற்றும் தொழிலதிபர் தேர்தலுக்காக கே என் ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.

### பேரறிஞர் அண்ணா உருவாக்கிய

# தமிழ்நாட்டில் மோடி மிரட்டல் செல்லுபடியாகாது!

## மணப்பாறையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

திருச்சி, மார்ச் 4 -

திருச்சி தெற்கு மாவட்டம் மணப்பாறை தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவ சிலை திறப்பில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிரதமர் மோடி மிரட்டினால் பயப்படுவதற்கு நாங்கள் அ.தி.மு.க. அல்ல இது அண்ணா உருவாக்கிய தி.மு.க என்பதை மறந்து விடக்கூடாது. தமிழ்நாட்டில் மோடி மிரட்டல் எல்லாம் செல்லுபடியாகாது என்று குறிப்பிட்டார்.



திருச்சி மாவட்டம், மணப்பாறை திண்டுக்கல் மெயின் சாலையில் மாட்டுச்சந்தை அருகே முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞரின் சிலை திறப்பு விழா நடைபெற்றது. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கலந்து கொண்டு சிலையை திறந்து வைத்தார். முன்னதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது, நாடாளுமன்ற தேர்தல் வர இருக்கின்றது. அதனால் தான் பிரதமர் மோடி இப்போது தான் அவ்வபோது வந்து சென்று கொண்டிருக்கிறார். புயல், வெள்ளம் தாக்கிய போது, மீனவர்கள் இறந்த போது, நீட் தேர்வால் 22 மாணவ மாணவிகள் இறந்த போது வராத மோடி ஏன் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் வராத மோடி இப்படி எதற்கும் வராத மோடி, இப்போது அடிக்கடி தமிழகத்திற்கு வந்து செல்கிறார் என்றால் தேர்தல் வந்து விட்டது என்று அர்த்தம். அழிப்பேன், ஒழிப்பேன் என்று பிரதமர் சொல்கிறார். ஆனால் எங்கள் முதல்வர் எழுதிய கடிதத்தில் ஆளும் கட்சியாக இருந்த போது ஏதும் செய்யவில்லை. எதிர்க்கட்சியாக இருக்கும் போதாவது ஏதாவது செய்வீர்களாக என்று நாகரீகமாக கேட்டிருந்தார் என்று பேசினார். தொடர்ந்து பேசிய அவர் மோடி மிரட்டினால் அடிபணிய இது அ.தி.மு.க. அல்ல. அண்ணாவின் தி.மு.க. அண்ணா உருவாக்கிய தமிழ்நாடு. மோடியின் மிரட்டல் எல்லாம் இங்கு செல்லுபடியாகாது என்று கூறினார்.

கலைஞரின் சிலையை திறந்து வைத்து திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசியதாவது,

இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி தான் வெற்றி பெறப் போகிறது. காஷ்மீர், டெல்லி, மராட்டியம், தமிழ்நாடு இப்படி இந்தியா கூட்டணி அமைந்து விட்டது. தமிழ்நாடு தான் இதற்கு வழிகாட்டுகிறது. மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி வரப்போகிறது என்று கூறினார்.

இந்நிகழ்வில் திருச்சி மாநகரக்கழகச்செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சபியுல்லா, சேகரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட கழக அவை தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், மணப்பாறை நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், மணப்பாறை ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி, மணப்பாறை ஒன்றிய குழு தலைவர் அமிர்தவள்ளி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரம், 3வது பகுதியில் இல்லம் தோறும் ஸ்டாலின் குரல் திண்ணைப் பிரச்சாரம் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமையில் வீடு, வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் வண்ணை அரங்கநாதன், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பகுதி செயலாளர் கல்யாணசுந்தரம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| வால்பாறை நகரம் | : | திருமதி. சேலம் சுஜாதா |
| தாரமங்கலம் நகரம் | : | கரூர் முரளி |
| சீர்காழி நகரம் | : | திருமதி. புதுக்கோட்டை விஜயா |
| திருவில்லிப்புத்தூர் நகரம் | : | திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி |
| ஆரணி நகரம் | : | வி.பி. கலைராஜன் |
| கம்பம் நகரம் | : | வே.மதிமாறன் |
| குமாரப்பாளையம்நகரம் | : | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| பல்லடம் நகரம் | : | தக்கோலம் தேவபாலன் |
| காரைக்குடி நகரம் | : | சென்னை அரங்கநாதன் |
| உடுமலைப்பேட்டை நகரம் | : | கு. கருணாநிதி |
| அம்பாசமுத்திரம் நகரம் | : | மதுரை எஸ். பாலா |
| கொல்லங்கோடு நகரம் | : | திருமதி. பவானி ராஜேந்திரன் |
| ஆவடி மாநகரம் | : | திண்டுக்கல் ஐ. லியோனி |
| பவானி நகரம் | : | ஒப்பிலாமணி, பொன்னேரி சிவா |
| கடையநல்லூர் நகரம் | : | நாஞ்சில் சம்பத் |
| அரக்கோணம் நகரம் | : | தமிழன் பிரசன்னா |
| ஆத்தூர் நகரம் | : | சூர்யாவெற்றிகொண்டான் |
| இராமேஸ்வரம் நகரம் | : | சைதை சாதிக் |
| பட்டுக்கோட்டை நகரம் | : | கா.அமுதரசன் |
| திருப்பூர் மாநகரம் | : | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| உசிலம்பட்டி நகரம் | : | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| தூத்துக்குடி மாநகரம் | : | இரா. ராஜீவ்காந்தி |
| கண்டோண்மெண்ட் நகரம் | : | இ.பரந்தாமன் |
| கோட்டகுப்பம் நகரம் | : | ஆ. கிருஷ்ணசாமி |
| ஜோலார்பேட்டை நகரம் | : | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| கூடலூர்நகரம்(கோவை) | : | கோவை செல்வராஜ் |
| கூடலூர் நகரம் (நீலகிரி) | : | வி.சி.சந்திரகுமார் |
| முசிறி நகரம் | : | கடலூர் இள. புகழேந்தி |
| பள்ளப்பட்டி நகரம் | : | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பரமக்குடி நகரம் | : | வி.பி. இராசன் |
| குழித்துறை நகரம் | : | சௌமியன் |
| குன்னூர் நகரம் | : | சித்திக் |
| பொள்ளாச்சி நகரம் | : | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ப.சீ. கிருஷ்ணசாமி

### மார்ச் 4 (2001)



பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!” எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### எழும்பூர் தொகுதியில் கழகத் தலைவர் தளபதி பிறந்த நாள்!

# 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - பரிசுப் பொருட்கள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாடு!

சென்னை, மார்ச் 4 -

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் 71ஆவது பிறந்த நாளைப் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் கொண்டாடும் முகமாக, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதி, 61ஆவது வட்டம், பாந்தியன் சாலையில் அமைந்துள்ள எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் 01.03.2024 அன்று பிறந்த 33 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்விற்கு எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் முன்னிலை வகித்தார்.

முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ. மருதன்,

மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, 108வது வட்டத் துணைச் செயலாளர்கள் கே.சீனி வாசன், இந்திராணி,

முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் விஜயபோஸ், 108 (அ) வட்ட இளைஞரணி அணி அமைப்பாளர் சதிஷ்குமார்,

108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ் குமார், 58 (அ) வட்ட இளைஞரணி அணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், தேவநிதி, நாகராஜ், சூளை பன்னீர் செல்வம், புஷ்பராஜ், பாலாஜி அன்புமணி, கோமகன், பாக முகவர் கவிதா, சத்யா, வழக்கறிஞர் தர்மதுரை, கே.பி. பார்க் சதிஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)21/2024 நாள் : 01.03.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி 5 மண்டலங்களிலுள்ள வார்டு பகுதிகளுக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளுக்கு தார் ஒட்டுப் போடுதல் | 5 பணி | 11.03.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 12.03.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 185/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 02.03.2024




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம் நகரம், பழைய வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு பகுதிகளில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணைப் பிரச்சாரத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் நமது கழக அரசின் சாதனைகள் மற்றும் நிதிநிலை அறிக்கையை பற்றி விளக்கி துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். உடன் தாராபுரம் நகரக் கழகச் செயலாளர் சு.முருகானந்தம், நகரக் கழக துணைச் செயலாளர்கள் வெ.கமலக்கண்ணன், செலின் பிலோமினா, மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.எம்.யூசுப், சீனிவாசன், செந்தில்குமார் மற்றும் மாவட்ட, நகர, வார்டுக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.